22nd January 1965]

மதிப்பீட்டுக் குழு செய்த பரிந்துரை மீது அரசு எடுத்திருக்கும் முடிவு யாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏற்கெனவே நிறுவியுள்ள 10 ஜூனியர் தொழிற்பள்ளிகளோடு, மேலும் ஆறு பள்ளிகளை 1965-66-ல் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. மாதா கவுடர் : புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற பள்ளிகள் எந்த எந்த மாவட்டங்களில் ஏற்படுத்த இருக்கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : காஞ்சிபுரம், நாகப் பட்டிணம், குடியாத்தம், அண்ணாமலைநகர், சேலம் ஆகிய இடங் களில் ஏற்படுத்துவதாக இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இந்தப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு எந்த அடிப்படையில் இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாலிடெக்னிக்குகள் இருக்கிற இடத்தில் ஜூனியர் டெக்னிகல் பள்ளிகளை ஏற்படுத்து கிறோம்.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : இப்போது இருக்கிற தொழிற் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: தனியாக கேள்விப்போட வேண்டும்.

* 67. கேள்வி— **திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழ் நாட்டில் தொழிற் பயிற்சிப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதற்காக அண்மையில் மத்திய அரசு இம்மாநில அரசாங்கத்திற்கு ஏதேனும் உதவித்தொகை வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The Government of India have given their approval for starting three new Industrial Training Innstitutes one each at Erode, Theni and Karaikudi with effect from 1st February 1965 at a total cost of s 46 lakhs. They will bear 60 per cent of the total cost of he scheme subject to the ceiling fixed by the Finance Ministry.

விவசாயிகளுக்குப் பட்டா வழங்கும் முறை

* 68. கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டம் அயோத்தியா பட்டணத்தில் 1—8—1964-ல் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில், விவசாயிகளுக்குப் பட்டா வழங்கியதை, மாவட்ட ஆட்சித் தலைவர், ஒரு அரசியல் கட்சித் தலைவர் கையால் வழங்கியது உண்மையா?

திரு. டி. கார்ச்சா கவுடர்: நீலகிரி ஜில்லாவிலே ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்குக் கூட ஐந்து சென்ட் பூமி கொடுக்கக் கூட தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்கும், பூமி இல்லாத ஏழைகளுக்காவது ஒரு ஏக்கர் அளவுக்கு நிலம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமையா: நீலகிரியில் உள்ள நிலங்கள் எல்லாம் கட்டுப்பாடாகக் கண்காணிப்பில் இருக்கவேண்டும். ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் நிலம் கொடுக்க வேண்டுமென்றால் விசேஷ கவனம் செலுத்த உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம். பொதுவாக அங்கு இருக்கக்கூடிய நிலையைத் தளர்த்திவிடத் தயாராய் இல்லை.

திரு. கே. பி. பழனிசாமி: முப்பது ஆண்டுகள் நாற்பது ஆண்டுகள் விவசாயம் செய்து வந்த பூமியையெல்லாம் இப்போது உணவு நெருக்கடி காலத்தில் ஃபாரஸ்ட் விதிகளைக் காட்டி மரம் நட்டு விடுகிறார்கள். அதைத் தடுத்து மறுபடியும் அவற்றை விவசாயிகளுக்குக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: இந்தச் சிக்கல் ஏற்பட்டது 'ரீ-சர்வே, ரீ-செட்டில்மெண்ட்'டுக்குப் பிறகுதான். இதைப் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிவிக்கும் பட்சத்தில் அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்திருப்பார்கள். இதற்கு என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி டைரக்டர் ஆப் செட்டில்மெண்டோடு ஆலோசிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி: உணவுப் பிரச்னை இதனோடு சம்பந்தப்பட்டிருப்பதால் சர்க்கார் மறு பரிசீலனை செய்து இந்த நிலங்களுக்கு டெம்பரரி பட்டா கொடுக்க உத்தரவிடுவார்களா ?

கனம் திரு வெ. ராமையா: அப்படி உத்தரவிட வேண்டிய ஒரு நெருக்கடியான கட்டம் இப்போது இல்லை.

திரு. தா. சின்னசாமி: ஏழைகளுக்கு உபகாரம் செய்கிற இந்த நோக்கிலே ஹரிஜனங்களுக்கு ஓடை புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, தரிசு நிலங்கள் ஆகியவற்றுக்குப் பட்டா வழங்க அரசாங்கம் வழி வகை செய்யுமா?

கனம் திரு. வெ. ராமையா: அவர்களுக்கெல்லாம் உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் விசேஷ கவனம் செலுத்துவதற்கு எல்லா ஜில்லாக்களிலும் நில அடமானத்தைச் செய்து கொடுக்க ரெவின்யூ இலாகா அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: நீலகிரிக்கு மாத்திரம் தனியாக இந்தத் தடை விதிப்பதன் நோக்கமென்ன ? ஒரு ஏக்கருக்குள்ளாக பட்டா கொடுப்பதிலே என்ன சங்கடம் ஏற்படும் என்று விளக்குவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா: தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைக் கொடுக்க முடியும்.

22nd January 1965]

திரு. டி. கார்ச்சா கவுடர்: 1964-ம் ஆண்டு வரை கலெக்டர் அவர்களே பார்த்து பூமி இல்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது ஒரு செண்ட் நிலம் கூடக் கொடுக்கக்கூடாது என்று தடை விதித்திருப்பதற்குக் காரணம் என்ன? கலெக்டர் அவர்கள் மேல் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லையா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அரசாங்கத்திற்குக் கலெக்டர் மேல் பரிபூரணமான நம்பிக்கை இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் நீலகிரியைப் பொறுத்த வரை எல்லா விவரங்களையும் கொடுக்க முடியும்.

காவேரி டெல்டாவில் பாசன வசதிகள்

*70 கேள்வி—**திரு. மு. கருணாநிதி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவேரி டெல்டாவில் பாசன முறையைப் பற்றி பரிசீலனை செய்ய அமெரிக்க நிபுணர் குழு தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ததா?

(இ) ஆம் எனில், அந்தக்குழு அளித்த பரிந்துரைகள் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) The report of the U.S.A.I.D. and Ford Foundation Experts has just been received and it is under the consideration of Government.

திரு. கே. ஏ. மதியழகன்: அமெரிக்க நிபுணர்கள் அளித்துள்ள அந்தப் பரிந்துரையில் 'இப்போது இருக்கிற பாசன முறைகள் ரொம்பப் பழங்காலத்தவை; இதை மாற்றியமைத்தால் இன்னும் இந்தக் காவிரி டெல்டாவில் இரண்டு லட்சம் ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்யலாம். அதோடு இப்போது இருக்கிற மாதிரி இல்லாமல் எல்லாப் பருவங்களிலும் உற்பத்தி செய்ய முடியும்' என்று இருப்பது உண்மையா? அப்படி இருப்பது உண்மையானால் இப்போது இருக்கிற உணவு நெருக்கடியை முன்னிட்டு இந்தக் காரியத்திலே விரைவாக, துரிதமாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: அவர்களுடைய அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், அமெரிக்க நிபுணர்கள் வரும் வரை காத்திருக்காமல் சென்னை ராஜ்ய அரசாங்கமே பூர்வாங்க வேலையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் மேலும் இரண்டு லட்சம் ஏக்கர் விவசாயத்திற்குக் கொண்டு வர முடியும் என்பதோடு கூட இப்போது இருக்கிற முயற்சி எல்லாம் தஞ்சை ஜில்லாவில் சம்பா அறுவடை காலத்தில் பத்து பன்னிரண்டு லட்சம் ஏக்கரில் அறுவடையான நிலங்களை மீண்டும் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக பாசன ஆதாரங்களை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டு அதற்கான முன்னோடி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அது மட்டுமல்லாமல்